# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2472/18 - 2026 ජනවාරි මස 20 වැනි අඟහරුවාදා - 2026.01.20

2472/18 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 20 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: DNK/LND1/DEACQ/12/20.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 03 ஜே/88/ஈ/22.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

வடமேல் மாகாணத்தில் புத்தளம் மாவட்டத்தில் தங்கொட்டுவ பிரதேச செயலாளர் பிரிவில், தங்கொட்டுவ கிராமத்தில் அமைந்த நில அளவையாளர் நாயகத்தின் இல. பு/த/2000/198 மற்றும் 2001.03.14 ஆந் திகதிக்குரிய பிரதான வரைபடத்தின் காணித் துண்டு இல. 01 இனால் குறிப்பிடப்படும் 0.6750 ஹெக்டயார் விஸ்தீரணத்தைக் கொண்ட கொஸ்கஹவத்த எனும் பெயருடைய காணித் துண்டின் விபரங்கள் :

01. துண்டு இல. 01

காணியின் பெயர் : கொஸ்கஹவத்த; உரிமை கோருவோர் : சிலாபம் ரதகுரு வீட்டில் வதியும் ராஜகுரு பிரசாதீன் மதகுரு; விஸ்தீரணம் : 0.6750 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2026 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 11 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு தங்கொட்டுவ பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2026 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 04 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். உரிமையை நிரூபிப்பதற்காக அதற்கு உரிய பத்திரம் மற்றும் கடிதங்களை நேர்காணலின் போது ஒப்படைக்க வேண்டும்.

டபிள்யூ. நிலந்தி பிரியதர்ஷனி,
பிரதேச செயலாளர்,
தங்கொட்டுவ.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
தங்கொட்டுவ,
2026, சனவரி 16.

EOG 01 - 0206




*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*